
# 08 ஆண்டவர் ஒடுக்கப்பட்ட யாவரையும் நேசிக்கிறார்

நாம் வாழும் உலகில் இன்று சிறுவர் இல்லம், மாதர் புகலிடம், முதியோர் இல்லம் என்பன அதிகரித்துக்கொண்டு வருகின்றன. இவை அதிகம் உருவாகுவதற்குக் காரணம் என்னவென்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

இயேசு இறைமகனாய் இப்பூவுலகிற்கு மானிடனாய் வந்தது முதல் சமூதாயத்தில் ஒதுக்கப்பட்ட பெண்கள், சிறுவர், வயோதிபர் போன்றோரின் நல்வாழ்வில் அதிகம் அக்கறை கொண்டார். தம் பணியை இவ்வாறு ஒதுக்கப்பட்டவர்களுக்காக அர்ப்பணித்துக் கொண்டார்.

தற்போது, நான்கு பெண்களில் ஒரு பெண் வன்முறைக்கு உள்ளாக்கப் படுகிறார் எனக் கூறப்படுகிறது. பெண்களுக்கெதிரான இந்த வன்முறைகள் தமது வீட்டில் அல்லது அலுவலகத்தில் அல்லது அகதி முகாம்கள் போன்ற பல இடங்களில் இடம்பெறலாம்.

## பெண்களுக்கு எதிரான வன்முறைகள்



## யூத சமுதாயத்தில் பெண்களின் நிலை

> **வாசிப்போம்:**
> லூக்கா 8:1-3
> லூக்கா23:26-28

இன்று உலகெங்கும் பெண் சமத்துவம் காணப்படாதது போல, யூத சமுதாயத்திலும் பெண்களுக்கான உரிமை மறுக்கப்பட்டு ஆண் ஆதிக்கம் நிறைந்த சமுதாயமாக காணப்பட்டது. அங்கு பெண்கள் தாழ்வானவர்களாகவே எண்ணப்பட்டனர். பெண்கள் வீட்டுப்பணிகளில் ஈடுபடுதல், பிள்ளைகளைப் பராமரித்தல் போன்ற பணிகளிலேயே ஈடுபட்டனர். தொழிலில் ஈடுபடல் அல்லது இறைபணியில் ஆண்களைப் போல ஈடுபடல் ஆகியவை விலக்கப்பட்டிருந்தன. ஆனால் இயேசு யூத சமூகம் ஏற்றுக்கொண்ட பாரம்பரியங்களை உடைத்து, அவர்களும் ஆண்களைப் போல் சம உரிமை பெற்று இறையரசின் வளர்ச்சியில் ஈடுபட வழிவகுத்தார்.



பொல்லாத ஆவி, நோய் ஆகியவற்றிலிருந்து குணமாகிய பெண்கள் சிலரும், ஏழு பேய்கள் நீங்கப்பெற்ற மகதலான மரியாவும், ஏரோதுவின் மாளிகை மேற்பார்வையாளர் கூசாவின் மனைவி யோவன்னாவும், சூசன்னாவும் மேலும் பல பெண்களும் இயேசுக்குப் பெண் சீடர்களாய் இருந்தனர். இவர்கள் இயேசுவோடு இறையரசுப் பணிக்காகச் சென்றதோடு, தங்கள் உடமைகளையும் இறைவளர்ச்சிக்காகப் பயன்படுத்தினர்.

யூத சமுதாயத்தில் பெண்கள் வெளியிடங்களில் அழுவது தடைசெய்யப்பட்டிருந்தது. இயேசுவைப் பிடித்து சிலுவை மரணத்துக்குக் கொண்டு சென்ற வேளையில் பல பெண்கள் புலம்பி, ஒப்பாரி வைத்து அவருக்குப் பின்சென்றார்கள். இயேசு அப்பெண்கள் பக்கம் திரும்பி, " எருசலேம் மகளிரே நீங்கள் எனக்காக அழ வேண்டாம். மாறாக உங்களுக்காகவும், உங்கள் மக்களுக்காகவும் அழுங்கள்." என்று கூறி இயேசு, பெண்களுக்கு சமூகத்தில் உரிய இடம் கொடுக்க இயேசு விரும்பினார்.


இலவச விநியோகத்திற்காக

## சிறுவர்களை இயேசு நேசிக்கிறார்



பதினாறு வயதிற்கு உட்பட்டோர் சிறுவர்கள் என அழைக்கப்படுகின்றனர். உணவு, உடை, கல்வி, உறையுள், பாதுகாப்பு என்பவற்றுக்காக இவர்கள் பிறரில் தங்கி வாழ்வோர் ஆவர்.

இன்றும் உலகில் பல சிறுவர் வறுமை, எழுத்தறிவின்மை, நோய்கள், சுற்றாடல் நெருக்கடி, யுத்தம் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு துன்பப்படுகின்றனர். இவற்றைத் தடுத்து நிறுத்துவது நம் ஒவ்வொருவரது கடமையாகும்.

1. இயேசு சிறுவனாக இருக்கும் போது ஞானத்திலும், உடல் வளர்ச்சியிலும் மிகுந்து, கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்தார். நீங்கள் பாடசாலைக்குச் சென்று அநேக பாடங்களைப் படிப்பது போன்று, இயேசுவும் தேவாலயத்திற்குச் சென்று யூதசட்டத்தைக் கற்றார்.

   அதைப்போல நீங்களும் கடவுளின் வார்த்தையைப் படிப்பதன் மூலம் ஞானத்தைப் பெறமுடியும்.

2. இயேசு உடலிலே வளர்ச்சி பெற்றார்- நீங்கள் சிறு குழந்தையாக இருந்து இன்று அழகாக உடல்ரீதியாக வளர்ந்துள்ளீர்கள். அதேபோல இயேசுவும் வளர்ச்சி பெற்றார்.

3. இயேசு இறை அருளில் வளர்ச்சி பெற்றார். இயேசு தனது தந்தையான யோசேப்பு மற்றும் தாயாகிய மரியாளுக்கும் எப்பொழுதும் கீழ்ப்படிந்து அவர்களுடன் நெருங்கிய உறவை வைத்தார்.



4. இயேசு மனிதர் தயவிலே வளர்ச்சி பெற்றார். இயேசு எப்பொழுதும் மக்கள் மீது அன்பும் கரிசனையும் கொண்டு அவர்களுடன் உரையாடினார். உதவிகள் செய்தார், நோய்களைக் குணமாக்கினார். இதனால் மக்கள் இயேசுவை நேசித்தனர். அவரைப் பின்பற்றினர்.



இலவச விநியோகத்திற்காக

இதனைப் போல் சிறுவர்கள் ஒவ்வொருவரும் ''இறைவனின் அருட்கொடை" என்பதாலும் அவர்கள் நாட்டின் நாளைய தலைவர்கள் என்பதாலும், இறைபக்தியிலும், கீழ்ப்படிவிலும், அறிவிலும், ஞானத்திலும் பெற்றோரால் வளர்க்கப்பட வேண்டும். ஒருநாள் சிலர், சிறு பிள்ளைகளை இயேசு தொட்டு ஆசீர்வதிக்கும்படி கொண்டு வந்தவேளை சீடர்கள் அவர்களை அதட்டினார்கள். இயேசு "சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். அவர்களைத் தடுக்காதீர்கள், ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது" எனக் கூறி. அவர்களைத் தொட்டு ஆசீர்வதித்தார். (மாற்கு 10:13-15)

***வாசிப்போம்:***
*மத்தேயு 19:13-15*

*நீதிமொழிகள் 20:7*
*எபேசியர் 6:1-4*

சீடர்கள் இயேசுவை அணுகி "விண்ணரசில் மிகப்பெரியவர் யார்" என்று கேட்டார்கள். அதற்கு அவர் ஒரு சிறு பிள்ளையை அழைத்து அவர்களை நடுவே நிறுத்தி, 'நீங்கள் மனந்திரும்பி சிறு பிள்ளைகள் போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள் என உறதியாகச் சொல்லுகிறேன். இந்தச் சிறு பிள்ளையைப் போல் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப்பெரியவர். இத்தகைய சிறு பிள்ளை ஒன்றை என் பெயரால் ஏற்றுக்கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார்' என்றார். ஆகவே பெரியவர்களும், குழந்தையைப் போல தாழ்மை, நம்பும்தன்மை, நேர்மை போன்ற நற்குணங்களை உடையவராக இருக்க வேண்டும்.

பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழப்படிய வேண்டும் என்பது ஆண்டவர் கொடுத்த கட்டளையாகும். இதன்படி தந்தையையும், தாயையும் மதித்து நடக்கவேண்டும். அப்பொழுது பிள்ளைகள் நலம் பெற்று மண்ணுலகில் நீடூழி வாழலாம் என வாக்குறுதி அளித்தார். இதனைப் போல இயேசுவும் தனது பெற்றோருக்குக் கீழ்படிந்து வந்தார் என திரு விவிலியத்தில் வாசிக்கின்றோம்.



இயேசு பன்னிரண்டு வயதில் பஸ்கா விழாவைக்கொண்டாட எருசலேம் தேவாலயத்திற்குச் சென்றார். பெற்றோருடன் திரும்பி வராமல் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதை கேட்டு எழுப்பிய கேள்விகளையும், அழித்த பதில்களையும், புரிந்து கொள்ளும் திறனையும், கண்டு ஆச்சரியப்பட்டனர்.

அவருடைய பெற்றோரும் அவரைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர். அப்பொழுது அவருடைய தாய், 'மகனே ஏன் இப்படிச்செய்தாய்' எனக் கேட்டபோது, 'என் தந்தையின் அலுவல்களில் நான் ஈடுபட்டிருக்க வேண்டும்' என்று கூறி அவர்களுடன் நாசரேத்துக்குச் சென்று பெற்றோருக்குப் பணிந்து இருந்தார்.

பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்படியுங்கள் இது நியாயம். பெற்றோரும் தமது பிள்ளைகளுக்கு எரிச்சல் உண்டாக்காமல் ஆண்டவருக்கேற்ற முறையில் திருத்தி அவர்களை இறைபற்றுடன் வளர்க்க வேண்டுமென என பவுல் புத்திமதி கூறுகிறார்.

## வயோதிபர்

**_வாசிப்போம்: திருப்பாடல் 71_**

அறுபத்தைந்து வயதிற்கு மேற்பட்டவர்களை நாம் வயோதிபர் எனக் கூறலாம். இவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் சமுதாயத்திற்குச் சேவை செய்தவர்கள்.

யூத சமுதாயத்தில் தந்தையையும், தாயையும் பராமரிக்க வேண்டும் என்பது கட்டளையாகும். ஆனால் சிலர் யூதப் பாரம்பரியத்திற்கு இணங்க 'கொர்பான்' என்ற காணிக்கையைச் செலுத்தி விட்டோம்; இனி வயோதிபரைக் கவனிக்க தேவையில்லை; தங்களுடைய கடமை முடிந்து விட்டது எனக்கூறுபவரை இயேசு கண்டிக்கிறார்.

நாம் நமது வாழ்க்கையை நலமுடன் நடத்த வேண்டுமானால் நமது வீட்டில் இருக்கும் முதியோர்கள் அன்பாக நடத்தப்பட வேண்டும்.அவர்களுக்கு தேவையான உணவு, உடை, உறையுள் என்பவற்றுடன், அவர்களுக்கு அன்பும், அரவணைப்பும் வழங்க வேண்டியது நமது கடமை ஆகும்.

**_இணைச்சட்டம் 5:16_**

_உன் தந்தையையும், தாயையும் மதித்து நட இதனால் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு அளிக்கும் நாட்டில் நீ நெடு நாள் நலமுடன் வாழ்வாய். உன் கடவுளாகிய ஆண்டவர் கட்டளை இதுவே._

சிலர் முதியோரை தமக்கு வீட்டில் பாதுகாப்புக்காக அல்லது பிள்ளைகளை பராமரிக்கப் பயன்படுத்தி விட்டு தமது தேவைகள் முடிந்து விட்டதும் அவர்களை முதியோர் இல்லத்திற்கு அனுப்பி விடுகிறார்கள். இயேசுவின் பிள்ளைகளான நாம் முதியோரை நேசித்து அவர்களை அன்பு செய்து பராமரிப்போம்.



_வயோதிபர்களை கௌரவமாக நடாத்தி அன்பாகப் பராமரிப்போம்._

_முதியோர் தினம் ஒக்டோபர் 1ம் திகதி கொண்டாடப்படுகிறது._



இலவச விநியோகத்திற்காக

முதியோர்



- திரு விவிலியம் வாசித்தல்
- ˙ஜெபம் செய்தல்
- ஆலயங்களில் ஆராதனைகளில் கலந்துகொள்ளல்
- ஒன்றுகூடல், பொழுதுபோக்குகளில் ஈடுபடல்
- வீட்டுத் தோட்டம் அமைத்தல்

போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் தங்கள் தனிமையினைப் போக்கிக்கொள்ளலாம்


## மாற்று வலுவுள்ளோர்

***வாசிப்போம்:***
*யோவான் 5:1-9*

*மத்தேயு 8:1-4*
*லூாக்கா 19:1-15*

தம்முடைய திருப்பணியை ஆரம்பித்த காலந் தொடங்கி ஊனமுற்றோர், குருடர் போன்றோர் சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களாகக் கண்டு அவர்களைக் குணமாக்கினார். யூத சமுதாயத்தில் தொழுநோயாளர், சமுதாயத்தில் இருந்து அகற்றப்பட்டுத் தனிமையாக வாழ்ந்தனர். அவர்களை இயேசு தொட்டுக் குணமாக்கினார்.

முப்பத்தெட்டு ஆண்டுகளாய் உடல் நலமற்று இருந்த ஒருவரைக் கண்டு, “எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்து செல்லும்” என்று கூற, உடனே அவன் நலமடைந்து தம்முடைய படுக்கையை எடுத்துக்கொண்டு நடந்தான். ஆனால் யூதர்கள் இயேசு நோயாளியைக் குணமாக்கியதைக் குறித்து மகிழ்ச்சியடையாமல், ஓய்வு நாளில் குணமாக்கியதைக் குறித்து குற்றம் கண்டனர்.



சக்கேயு என்ற ஆயக்காரன் காட்டத்தி மரத்தில் ஏறி இயேசுவைக் காணும்படி விரும்பிய சந்தர்ப்பத்தில், இயேசு அவனைக் கண்டு ‘சக்கேயுவே விரைவாய் இறங்கிவாரும். இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்’ என்று கூற, குள்ளன் சக்கேயு விரைவாய் மரத்திலிருந்து இறங்கிவந்து “ஆண்டவரே என் உடமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்து விடுகிறேன். எவர் மீதாவது பொய்க் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால், நான் அதை நான்கு மடங்காகக் கொடுத்து விடுகிறேன்” என்றான்.

இயேசு சக்கேயுவை நோக்கி, “இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று” என்றார். இவ்வாறு இயேசு எப்பொழுதும் ஒதுக்கபபட்டவர்களையும், துன்புறுவோரையும் அன்புடன் நேசித்து அவர்களை மதித்தார்.

இன்று நாம் வாழும் சமுதாயத்திலும் வறுமை, நோய், போர், தனிமை போன்றவற்றால் பலர் துன்பப்படுகிறார்கள். இவர்களை நாம் இனங்கண்டு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அவ்வாறான நிலமைகள் மீண்டும் உருவாகாமல் இருக்க நம்மை அர்ப்பணிப்போம். வறுமை, நோய், போர், போன்றவற்றால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவோம்.



## நாம் கற்றுக்கொண்டவை

- இயேசுவின் பணி, பெண்கள், சிறுவர், வயோதிபர்கள் மாற்றுவலுவுள்ளோர் போன்றோருடன் சம்பந்தப்பட்டது.
- இயேசு ஆண், பெண் இருபாலாரையும் சமமாகவே நோக்கினார். பெண்களை ஒடுக்குவது தவறு எனவும், மாறாக அவர்கள் மனித நேயத்துடன் நோக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.
- இயேசுவைப் போல ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும், சிறுவர்கள் வளர்க்கப்படவேண்டும்.
- சிறுவர்கள், வறுமை, யுத்தம் உடல் உழைப்பு போன்றவற்றால் துன்புறாமல் இறைபக்தியிலும், கீழ்ப்படிதலிலும் வளர்க்கப்படவேண்டும்.
- சிறுவர்கள் பெற்றோரையும், பெரியோரையும் கனம்பண்ண வேண்டும்.
- இயேசு மாற்றுவலுவுள்ளோரை நேசித்து அவர்களுக்கு உதவிசெய்தார்.
- வயோதிபர் அன்புடன் பேணப்பட வேண்டும்.

## செயற்பாடு

1. இயேசுவைப் போன்று பெண்கள், சிறுவர், வயோதிபர்கள் மாற்றுவலுவுள்ளோர் போன்றோருக்கு நீர் எவ்வகையில் உதவுவீர் என செயல்திட்டம் ஒன்றைத் தயாரிக்க.
2. வயோதிபர் இல்லம் அல்லது வலது குறைந்தோர் இல்லம் ஒன்றுக்கு குழுவாக சென்று அங்கு நீர் செய்ய கூடிய பணிகளை எழுதுக.
3. **யாரால், யாருக்கு, எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது.**
   i. "எருசலேம் மகளிரே நீங்கள் எனக்காக அழ வேண்டாம்." எழுந்து உன் படுக்கையை எடுத்துகொண்டு நடந்து செல்லும்.
   ii. "சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள்; அவர்களைத் தடுக்காதீர்கள்".



இலவச விநியோகத்திற்காக